வெளியீட்டு எண்:7
ஜெனவரி 3ந் தேதி 2006ஆம் ஆண்டு

# அரசுசாரா நிறுவன தகவல் இதழ்

பி.பெ.வ.கூ. அரசுசாரா நிறுவன தகவல் மற்றும் ஆவண அலுவலகம்
No: 6, Chanda Sahib street, Pondicherry, 605 001. India.
Telephone: +91 413 520 0606 Fax: +91 413 520 0607
Email: infoinde@ader-france.org

தென்னிந்தியாவில் அதிகமான தொண்டு நிறுவனங்கள் இருப்பதால் அவைகளுக்கு உதவி செய்யும் பொருட்டு (ADER-ASSOCIATION POUR LE DEVELOPPEMENT ECONOMIQUE REGIONAL) அதாவது, பி.பொ.வ.கூ. (பிராந்திய பெருளாதார வளர்ச்சி கூட்டமைப்பு) என்ற ஒரு பிரஞ்சு தொண்டு நிறுவனமும் மற்றும் FDF- (LA FONDATION DE FRANCE) அதாவது, பி.த.ஸ். (பிரன்ச் தர்ம ஸ்தாபனம்) என்ற ஒரு பிரன்ச் தொண்டு நிறுவனமும் இணைந்து துவக்கிய அரசுசாரா நிறுவன தகவல் அலுவலகத்தை பி.பொ.வ.கூ. புதுவையில் நடத்திவருகிறது. இந்த அலுவலகம் சுனாமி சம்மந்தமான அனைத்து தகவல்களையும் பெற்று, தயார் செய்து தகவல் மடலாக மாதம் இரு முறை தமிழ், ஆங்கிலம் மற்றும் பிரன்ச் மொழிகளில் வெளியிடுகிறது.

## உள்ளடக்கம்


- **இரு வார செய்திகளின் தொகுப்பு**
- **சுனாமி பேரழிவு இறுதி அறிக்கை**
  - பொதுச்செய்திகள்
  - வாழ்வாதாரம்
  - ஊடகம்
  - முதலாம் ஆண்டு சுனாமி நிறைவு
  - மறுகட்டுமானம்
  - சமூகம்
- **மற்ற பயனுள்ள செய்திகள்**
- **புதிய ஆன்லைன் வளங்கள்**
- **நிகழ்வுகளின் பட்டியல்**


## இரு வார செய்திகளின் தொகுப்பு :–

சுனாமியால் பாதிக்கப்பட்ட அனைத்து இடங்களிளும் முதலாம் ஆண்டு நிறைவையொட்டி உள்ளூர் மற்றும் மாவட்ட அளவிலான சம்பர்தாய நிகழ்ச்சிகள் மற்றும் நினைவுக் கூட்டங்கள் நடத்தப்பட்டது. இந்தியாவில் உள்ள மாநில சுயட்சியினாலும், உள்ளூர் மக்கள் சுனாமியால் அதிகம் பாதிக்கப்பட்டதாலும் அரசு, அதன் சார்பாக ஒரே மாதிரியான சம்பர்தாய நிகழ்ச்சியை மாநிலம் முழுவதும் நடத்தவில்லை : பாதிக்கப்பட்ட மாவட்டங்கள், நாகரங்கள் மற்றும் கிராமங்களின் அவரவர் தங்களே சுயமாக நினைவஞ்சலி செலுத்தினர்.

ஊடகங்கள், பல்வேறு நினைவு அஞ்சலிகளையும், புனரமைப்பு பணியில் அரசு மற்றும் தொண்டு நிறுவனங்களின் பங்கையும் பாராட்டியுள்ளது. பொதுவாக, இந்தியா பெற்ற சுனாமி உதவி பாதிகக்ப்பட்டவர்களை சென்று சேர்ந்துள்ளது என்பதை அனைவரும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

முதலாம் ஆண்டு சுனாமி நினைவு அஞ்சலி செலுத்தும் வேளையில் இன்னும் பல இடங்களில் வெள்ளத்தால் பாதித்தவர்களுக்கு நிவாரணம் கொடுக்கப்பட்டு வருகிறது. இது சுனிாமியை விட அதிக சேதத்தை விளைவித்து இருப்பினும், சர்வதேச நிதி கிடைக்கவில்லை. அதற்கு ஊடகங்களும் பெரும் அளவில் கவனம் செலுத்தவில்லை இதனால் உள்ளூர் அரசுசாரா நிறுவனங்களால் சுனமிக்கு நிதி பெற்றது போல் பெற இயலவில்லை.

பல தொண்டு நிறுவனங்கள் தங்கள் செயல் அறிக்கை மற்றும் பொது தகவல் ஆவணங்களையும் வெளிட்டுள்ளனர். மேலும் தங்கள் திட்டத்தை செயல்படுத்தும் பொழுது ஏற்பட்ட பிரச்சனைகள் பின், தங்கள் இலக்கை அடைந்தது போன்ற தகவல்களை இத்தகவல் இதழின் புதிய ஆன்லைன் வளத்தில் காணலாம்.

## சுனாமி பேரழிவு : இறுதி அறிக்கை

| | தமிழ்நாடு | கேரளா | ஆந்திர பிரதேசம் | புதுவை | அந்தமான் & நிக்கோபார் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| பாதித்த மக்கள் தொகை எண்ணிக்கை (லட்சம்) | 8.97 | 1.3 | 1.96 | 0.43 | 3.56 | 16.22 |
| பாதித்த கிராமங்களின் எண்ணிக்கை | 376 | 187 | 301 | 33 | 192 | 1 089 |
| உயிரிழப்பு | 8 009 | 177 | 107 | 599 | 3 513* | 12 405* |
| வீடுகள் சேதம் | 190 000 | 13 735 | 481 | 10 061 | 21 100 | 235 377 |
| பாதிக்கப்பட்ட விவசாய நிலங்கள் | 19 168 | 7 763 | 302 | 792 | 11 010 | 39 035 |
| படகுகள் சேதம் | 52 638 | 10 882 | 12 189 | 6 679 | 1 401 | 83 788 |
| மற்ற உயிரினங்கள் இழப்பு | 1 653 | 0 | 86 | 2 685 | 27 331 | 31 755 |
| சேதங்கள் (கோடி) | 4 528.66 | 2 371.02 | 342.67 | 466 | 3 836.56 | 11 544.91 |

* அந்தமான் மற்றும் நிக்கோபாரில் ‘‘தொலைந்தவர்களின்’’ எண்ணிக்கை சேர்க்கப்பட வில்லை

ஆதாரம் : ‘‘சுனாமி – நாட்டிற்கு ஓர் அறிக்கை’’, டிசம்பர் மாதம் 26ஆம் தேதி 2005ஆம் ஆண்டு தகவல் மற்றும் ஒளிபரப்புத்துறை அமைச்சகம், இந்திய அரசு வெளியிட்டது.

# பொதுச் செய்திகள்

***சுனாமி மறுகட்டுமானத்தை பற்றிய முக்கிய தகவல்கள்***

டிசம்பர் மாதம் 26ஆம் தேதி நிலநடுக்கம் மற்றும் சுனாமி ஏற்பட்டு 231,452 பேர் இந்தியப் பெருங்கடல் நாடுகளில் உயிரிழந்தனர். 11.4 மில்லியன் டாலர்கள் மறுகட்டுமானத்திற்காக வழங்கப்பட்டது.

மிக அதிக பணம் மற்றும் விரைவான நிவாரனத்திற்கு அவசரகால சர்வதேச நிதி இதுவே ஆகும் என்று ஐக்கிய நாட்டு சபை தெரிவிக்கிறது.

- மொத்த சேதம் : 10.73 பில்லியன் டாலர், மறுகட்டுமான செலவு : 10375 பில்லியன் டாலர்
- குடிபெயர்ந்த மக்களின் எண்ணிக்கை 1.77 மில்லியன்
- தேவைப்படும் வீடுகள் : 308,000 கட்டபப்பட்டவை அல்லது கட்டிக்கொண்டு இருப்பவை 46,000
- சேதம் அடைந்த படகுகளின் எண்ணிக்கை : 103,029
- சேதம் அடைந்த பள்ளிகளின் எண்ணிக்கை : 2300க்கும் மேற்பட்டவை
- ஆண்களை காட்டிலும் பெண்கள் மற்றும் குழந்தைகள் கொல்லப்பட்ட விகிதம் 1:3

ஆதாரம் : http://www.alertnet.org/thenews/newsdesk/SP29613.htm

## தமிழ்நாடு

***அரசு, தொண்டு நிறுவனங்களின் நடவடிக்கையை கண்காணிக்க வேண்டும்.***

தமிழ்நாடு அரசு, மாநிலத்தில் உள்ள அரசுசாரா நிறுவனங்களின் செய்லபாடுகளை" உன்னிப்பாக கவனிக்க" வேண்டும் என்று தன்னுடைய துறைகளில் ஒன்றான ஓர் ஆண்டு நினைவின் பொழுது இவ்வாறு கூறியிருப்பது மாநில அரசுசாரா நிறுவனங்களுக்கு அச்சத்தையும், அதிர்சியையும் கொண்டுத்துள்ளது.

அரசு, சமூக நலத்துறை அதிகாரிகளுக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றன வழிகாட்டலில், அரசுசாரா நிறுவனங்கள் சம்மந்தமாக தகவல்களை சேகரிக்க வேண்டும் குறிப்பாக வெளிநாட்டு நன்கொடை மற்றும் ஒழுங்குமுறை சட்டம் 1976ன்படி வெளிநாடுகளில் இருந்து பண உதவி பெறும் அரசுசாரா நிறுவனத்தின் பெயர், நிதி ஒதிக்கீடு செய்யப்பட்ட விவரம், எவ்வளவு காலமாக பணம் பெற்றுக் கொண்டிருக்கிறது போன்ற தகவல்களை சேகரிக்க இருக்கிறது.

மாநிலத்தில், குறிப்பாக சுனாமி பாதித்த இடங்களில் வேலை செய்யும் அரசுசாரா நிறுவனங்கள் முறைகேடாக செயல்படுகிறது என்ற பல புகார்கள் வந்துள்ளது என்பதை உயர் அதிகாரிகள் உறுதிசெய்துள்ளனர் இருப்பினும், சமூக நலத்துறை இந்த விவரங்கள் பெறுவதில் நடைமுறை சிக்கல் உள்ளது எப்.சி.ஆர்.ஐ மூலம் நிதி பெறுகின்ற அரசுசாரா நிறுவனங்களின் விவரம் மத்திய உள்துறை பெரமுடியும் எனவே மாவட்ட அதிகாரிகள் இத்தகைய தகவல்களை பெறுவது கடினம்.

பல அரசுசாரா நிறுவனங்கள் தங்களின் பெயரை மாவட்ட சமூக நலத்துறையிடம் பதிவு செய்யவில்லை மேலும் அவர்களின் அறிக்கையில் ஒரு சில செயல்பாடுகளைப் பற்றிய விவரம் உள்ளது.
ஆதாரம் : http://www.hindu.com/2005/12/24/stories/2005122416040700.htm

***கோ டி மோதலில் ஒருவர் கொல்லப்பட்டார்***

விழுப்புரம் மாவட்டம், பொம்மையப்பாளையம் கிரமத்தில் கடந்த வாரம் வியாழக்கிழமை மாலை மீனவர்களுக்கு இடையே நடந்த கோ டி மோதலில் ஒருவர் கொல்லப்பட்டார் மற்றும் மூவர் காயம் அடைந்தனர். 40 வயது மீனவர் கத்தியால் கூத்தப்பட்டு பலத்த காயமடைந்து பின்னர் புதுவை பொது மருத்துவமனையில் உயிரிழந்தார்

மற்ற மூவர் குணமடைந்து வருவதாக தெரிகிறது. அக்கிராமத்தை சார்ந்த மேலும் பலருக்கு சிறு காயங்கள் ஏற்பட்டது. சுனாமி நிவாரணம் வழங்குவதில் ஏற்பட்ட மோதலில் அக்கிரமங்களின் உள்ள மக்கள் இரண்டு குழுவாக பிரிந்ததால் இருபக்கங்களிலும் பதட்டம் மற்றும் குழப்பங்கள் நிலவியது.
ஆதாரம் : http://www.hindu.com/2005/12/23/stories/2005122307160300.htm

***சுனாமி குடியிருப்பில் பெரும் தீ விபத்து***

டிசம்பர் மாதம் 26ஆம் தேதி தரங்கப்பாடி அருகில் உள்ள புறையார் என்னும் இடத்தில் பெரும் தீ விபத்து ஏற்பட்டது. 40க்கும் மேற்பட்ட தற்காலிக குடியிருப்புகள் எரிந்து சாம்பல் மற்றும் 15 லட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருள்கள் எரிந்து நாசம் இருப்பினும் யாருக்கும் காயம் இல்லை.

முதலாம் ஆண்டு சுனாமியின் போது ஒரு வீட்டில் புகைப்படத்திற்கு அருகில் வைக்கப்பட்டிருந்த மெழுகுவத்தி சாய்ந்து அதன் மூலம் இச்சம்பவம் நடந்திருக்கலாம் என்று சந்தேகப்படுகின்றனர். சுனாமியால் உயிர் இழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் அனைத்து வீடுகளிலும் மெழுகு வத்தி ஏற்றிவைத்து வழிபட்டனர். தற்காலிக குடியிருப்பு உலோக தகட்டால் கட்டப்பட்டிருந்தாலும் தங்களை வெப்பத்தில் இருந்து பாதுகாத்துக்கொள்ள அதன் மேல் எளிதில் தீப்பிடிக்கும் கூரைகள் வேயப்பட்டிருந்தது. இச்சம்பவம் மதியம் சுமார் 2 மணி அளவில் ஏற்பட்டு அனைத்து வீட்டிற்கும் பரவியது.
ஆதாரம் :
http://www.newindpress.com/NewsItems.asp?ID=IET20051228013631&Page=T&Title=Southern+News+%2D+Tamil+Nadu&Topic=0&

## வாழ்வாதாரம்

***சுனாமி பாதித்த பகுதியில் மீண்டும் வேலைக்கு திரும்பினர்***

அஃஸ்போம், யூகோவின் அறிக்கையில், சுனாமியால் பாதிக்கப்பட்ட ஆசியாவை சார்ந்தவர்கள் முன்றில் ஒரு பகுதியில் மீண்டும் வேலைக்கு திருப்பினர். மக்களை சுனாமியால் உடைந்த கூலங்களை அப்புறப்படுத்துவது மற்றும் நிலத்தில் உள்ள உப்பு தன்மையை நீக்குவது போன்ற பனியினால் பெரும்பாலோர்க்கு வேலை கிடைத்தது. மேலும் அந்த அறிக்கையில் 10 லட்சம் பேர் வேலை இழந்துள்ளனர் ஆயினும், கடுமையாக முயன்று இயல்பு நிலைக்கு திரும்பலாம்.

நிரந்தர வீடு கட்டும் இடத்தில் உள்ளவர்களுக்கு வேலைகிடைக்கும் சாத்திரயக் கூறுகள் அதிகமாகவே உள்ளது என்று அஃஸ்போம் நம்புகிறது. மேலும் அது கூறுகையில் ஐந்தில் ஒரு பங்கினர் பேரழிவின் முதலாம் ஆண்டின் நிறைவின் போழுது நிரந்தர வீடு பெறுவர் என்று தெரிவிக்கிறது.
ஆதாரம் : http://news.bbc.co.uk/1/hi/world/asia-pacific/4544124.stm

### அந்தமான் மற்றும் நிக்கோபார்

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கிய பண உதவி அவர்களின் வாழ்வாதாரத்தை மேன்படுத்த உதவுகிறது. அந்தமான் நிர்வாகம் சுனாமியால் பாதிக்கப்பட்டு பகுதி நிரந்தர குடியிருப்பில் வசிப்பவர்கள் கடன் உதவி பெற்று சுயத்தொழில் தொடங்க விருப்பமுல்வர்களுக்கு முகாம் ஒன்றை நடத்தி அவர்களின் வாழ்வாதாரத்தை நிலைபடுத்தியது. பல்வேறு தொழிற்சாலைகளிலிருந்தும், வங்கிகளிலிருந்தும் மற்ற அரசு துறையிலிருந்தும் பிரதிநிதிகள் மற்றும் அதிகாரிகள் வந்து அவ்விடத்திலேயே பிரதிநிதிகள் மற்றும் அதிகாரிகள் வந்து அவ்விடத்திலேயே கடனுக்கு அனுமதி வழங்கப்படும் என்று அந்தமான துணை ஆணையர் திரு. கே. எஸ் சிங் கூறினார்.

அனைத்து துறை கடன் திட்டங்களும் சுனாமியால் பாதிக்கப்பட்ட பயனாளிகளுக்கு சுயத்தொழில் தொடங்குவதற்கு பயன்படுத்தப்படும். சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதி நிரந்தர குடியிருப்பில் வசிப்பவர்களும் இம்முகாமில் கலந்து கொண்டு பயன் பெறலாம்.
ஆதாரம் : http://www.and.nic.in/telegrame.htm (போர்ட் பிளேர், டிசம்பர் 14)

## புதுவை

***பேரழிவு சேமிக்கும் பழக்கத்தை கற்றுக்கொடுத்தது.***

கடல் எப்பொழுது இருக்கும் கடலில் இருந்து கிடைக்கும் எண்ணற்ற பொருள்கள் எப்பொழுதும் நிரந்தரம் என்று கூற இயலாது பல மீனவர்களுக்கு ஒரு நாள் சம்பாத்தியம் அன்றே செலவாகி விடுகிறது.

பலர் வீடுகளை இழந்து, உதவிக்காக காத்திருந்து குடிநீர், உணவு மற்றும் தங்குவதற்காக அவர்கள் பட்ட க ட்டங்கள் விளைவாக சுனாமி ஏற்பட்ட பிறகு மீனவர்களின் சேமிக்கும் பழக்கம் அதிகரித்துள்ளது.

புதுவை மற்றும் காரைக்கால் கடலோர மீனவர்கள் தங்களின் நாள் சம்பளத்தின் ஒரு பகுதியை வங்கியில் சேமித்து வைக்கும் பழக்கம் தற்போது அதிகரித்துள்ளது காரைக்கால் உள்ளுர் மீனவர்கள் குறிப்பாக காரைக்கால் மேடு மற்றும் கிளிஞ்சல்மேடு போன்ற பகுதியில் வசிப்பவர்கள் பெரும்பாலானோர் எ.டி.எம் அட்டை மற்றும் சேமிப்பு கணக்கு வைத்திருக்கிறார்கள் என்ன வங்கி மற்றும் சீட்டு கம்பெனிடம் இருந்து பெற்றனர் என்ற தகவல் தெரிவிக்கிறது. ஒரு தனியார் வங்கி 80 எ.டி.எம். இயந்திரத்தை காரைக்கால் மேடு என்ற இடத்தில் நிறுவியுள்ளது மற்றும் சேமிப்பு தொகையாக ரூபாய் 50 லட்சம் பெற்றுள்ளது.
ஆதாரம் : http://www.hindu.com/2005/12/26/stories/2005122600250900.htm

***காரைக்காலில் மீன் விற்கும் பெண்கள் மாற்றுத் தொழிலுக்கு வரவேற்பு***

ஒரு வருடத்திற்கு முன், கோட்டுச்சேரி மேடு மீனவர்கள் மீன்களை சேரிகளில் விற்றனர். சுனாமி ஏற்பட்ட பிறகு மீன்விற்கும் தொழில் மிகவும் பாதித்து மேலும் குடும்பத்தை நடத்துவதற்கு வருமானம் இல்லாமல் அவர்கள் வாடினர். ‘அல்டர்னேட்டியு டிவளப்மண்ட்’’ தொண்டு நிறுவனம், தாங்கள் மறுகட்டுமானத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் கிராமத்தைச் சார்ந்த 43 பெண்களுக்கு சாம்பல் கற்களை தயாரிக்கும் பயிற்சி கொடுத்து அதன் மூலம் தயாரிக்கும் கற்கள் வீடு கட்ட பயன்படுத்துகின்றனர்.

இப்பெண்களுக்கு பயிற்சி காலத்தில் ரூபாய் 50 வழங்கி 115 நாள் பயிற்சி வழங்கப்பட்டது. வெற்றிகரமாக பயிற்ச்சி முடித்தப் பெண்கள் தற்போது நிரந்தரமாக அப்பணியில் ஈடுபடுத்தப்படுகின்றனர். நாள் ஒன்றிற்கு குறைந்த பட்சம் ரூபாய் 60யை தங்கள் வீட்டிற்கு கொண்டு செல்கின்றனர்.

150க்கும் மேலான வீடுகள் கட்டப்பட உள்ளது மற்றும் கல் தயாரிக்கும் பணி அடுத்த மூன்று மாதம் வரை நடைபெறும் கிராமங்களில் சில வேலையில்லா ஆண்களும் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளனர். பெண்கள் தயாரிப்பில் ஆண்கள் மணல் மற்றும் சாம்பலை அவ்விடத்திற்கு கொண்டு வருவதற்கும் பயன்படுத்தப்படுகின்றனர். அரசுசாரா நிறுவனங்கள் இத்திட்டத்தை அருகில் உள்ள கிராமங்களிலும் செயல்படுத்த உள்ளனர்.
ஆதாரம் : http://www.hindu.com/2005/12/18/stories/2005121807460300.htm

## ஊடகம்

***சுனாமியால் பாதித்த சிறுவர்களிடம் இருந்த வாழ்த்து அட்டை***

தற்பொழுது நடைபெறும் விழாகாலத்திற்கு, கடலூர் மாவட்டம் சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் வரைந்த வாழ்த்து அட்டை கிரை மற்றும் யூனிசெஃப் போன்ற அமைப்புக்கள் வாங்கிக் கொண்டன. ஒவ்வொரு அட்டையிலும் சிறுவர்களின் பெயர் மற்றும் எளிதில் கண்டறிய அடையாள எண்ணும் கொண்டுள்ளது.

இந்த வாழ்த்து அட்டை அளவு 18X 21 செமி. இதன் விலை ரூபாய் 8 இந்த அட்டையை நேரடியாக விற்பனை சமூகத்தில் மகளிர் சுய உதவி குழுக்கள் மூலம் வங்கிகள், பள்ளிக்கூடங்கள் மற்றும் அரசு துறை நிறுவனங்களிலும் விற்கப்பட்டது. இந்த வாழ்த்து அட்டையை எப்பொழுது வேண்டுமானாலும் பயன்படுத்தலாம் ஏனெனில் இதனுள் எதுவும் அச்சிடப்படவில்லை.
ஆதாரம் : http://www.hindu.com/2005/12/19/stories/2005121903800300.htm

**குழந்தைகள் மற்றும் சுனாமி அறிக்கை**

பேரழிவு பாதுகாப்பு முறையை கற்றுக் கொடுத்து இருந்தால் ஆயிரக்கணக்கான குழந்தைகள் சுனாமியில் இருந்து தப்பித்திருக்கலாம் என்று தற்போது ஓர் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு ஏற்பட்ட சுனாமி நிவாரணத்தில் அரசு மற்றும் உதவி முகாம்கள் சிறுவர்களை பயன்படுத்த தவறியது மற்றும் வெளிநாட்டில் பின்பற்றும் தீர்வையே அவர்கள் மீதும் திணிக்கப்பட்டது என்றும் அவ்வறிக்கை கூறுகிறது. ஐக்கிய நாட்டு முகமையான யூனிசெப் தனது அறிக்கையில் 1.5 மல்லியன் சிறுவர்கள் அனாதையாகவும், காயமும் அல்லது பாதிக்கப்பட்டுள்ளனர் என்று ஒரு கண்க்கெடுப்பு தெரிவிக்கிறது.

இந்த அறிக்கை "குழந்தைகள் மற்றும் சுனாமி" 12 மாதத்தில் என்ற தலைப்பில் பின்வரும் இணையதளத்தில் காணலாம்.
ஆதாரம் : http://www.alertnet.org/thenews/fromthefield/506707/113447791492.htm

## முதலாம் ஆண்டு
## சுனாமி நிறைவு

***சுனாமி பேய் வேட்டையாடிய தினம்***

இத்தலைப்பு அறிவுப்பூர்வாமாக இல்லாமல் இருக்கலாம் ஆனால் 26ஆம் தேதி டிசம்பர் மாத்தில் இருந்து ஏற்றுக்கொள்ளத் தக்கவாரே இருக்கிறது. எனென்றால் அறிவியலும், இந்த கோர நிகழ்வை தடுக்க இயலவில்லை. தமிழ்நாட்டில் கடலோரப்பகுதியில் வாழும் மக்கள் மற்றும் மீனவர்கள் சுனாமிக்கு ஓர் ஆண்டு பின்னர் அதே நாளில் மீண்டும் வந்து தாக்கும் என்ற எண்ணம் பரவலாக இருக்கிறது.

நாகை மாவட்டம், அக்கரைப்பேட்டை துணை சுகாரா மையத்தின் வேலை செய்யும் செல்வி கூறியதாவது. "நங்க அனைவரும் நம்புகிறோம் சுனாமி நிச்சையமாக அதே நாளில் திரும்ப வரும்". அவரது வாதத்தை யாரவது அறிவயல்ரீதியாக தடுத்தால் உடனடியாக அறிவியல் கடந்த முறை முன்னெச்சரிக்கை செய்யவில்லையே? நீங்க பொறுத்து பாருங்க சுனாமி அதே டிசம்பர் 26ஆம் தேதி மீண்டும் வரும்.
ஆதாரம் : http://www.hindu.com/2005/12/25/stories/2005122511270100.htm

***சுனாமி முதலாம் ஆண்டு நிறைவை ஒட்டி அமைதிப் பேரணி***

நாகை மாவட்டத்தில், சுனாமி முதலாம் ஆண்டு நிறைவை ஒட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அமைதிப்பேரணியில் சுமார் 1000 பேர் கலந்து கொண்டனர்.

கோவில், மசூதி மற்றும் தேவாலயத்தில் சிறப்பு வழிபாடுகள் நடந்தது. அவர்களின் நினைவை போற்றும் பொழுது தங்களின் ஒற்றுமையையும் வெளிக்காட்டுவதாக இருந்தது. பின்னர் ஊர்வலத்தில் வந்தவர்கள் சுனாமியால் பாதிக்கப்பட்வர்களுக்கு அஞ்சலி செலுத்தினர் மேலும் மெழுகுவர்த்தியை ஏற்றி அவர்களின் ஆத்மா சாந்தியடைய வேண்டினர்.

அப்பொழுது பேசிய கலக்டர் ஜெ. இராதாகிரு ணன் கூறுகையில் டிசம்பர் 26ஆம் தேதியை சுனாமி நினைவாக கடைப்பிடிப்பதைகாட்டிலும் "பேரழிவு விழிப்புணர்வு நாளாக" கடைப்பிடிக்க வேண்டும் என்றார்.
ஆதாரம் :
http://www.newindpress.com/NewsItems.asp?ID=IET20051225225940&Page=T&Title=Southern+News+%2D+Tamil+Nadu&Topic=392&

***முதலாம் ஆண்டு நிறைவில் நினைவுப் பூங்கா***

நாகை மாவட்ட நிர்வாகம் சுனாமியால் பாதிக்கப்பட்ட 77 சிறு கிரமங்களும் நினைவுப்பூங்கா அமைத்துள்ளது. அரசு பாதிக்கப்பட்ட உறவினர்களுக்கு தென்னங்கன்று ஒன்றை கொடுத்தள்ளது. ஒவ்வொரு மரக்கன்றும் ஒருவரின் நினைவாக நடப்பட்டது. ஒவ்வெரு மரக்கன்றிற்கும் அருகில் இறந்தவரின் பெயர் எழுதப்பட்டிருந்தது. இத்துடன் 79 சுனாமி தற்காலிக குடியிருப்பு சுனாமி வாழும் நினைவாக மாறியது. ஒவ்வொரு வீட்டின் வெளியிலும் மக்கள் தங்கள் உறவினர்கள் மற்றும் நண்பர்களின் புகைப்படங்களை வைத்து அஞ்சலி செலுத்தினர். புகைப்படம் இல்லாதவர்கள் உயிரிழந்தவரின் பெயரை எழுதி தங்கள் விட்டு கதவுகளில் ஒட்டியுள்ளனர்.
ஆதாரம் :
http://www.newindpress.com/NewsItems.asp?ID=IET20051217000002&Page=T&Title=Southern+News+%2D+Tamil+Nadu&Topic=0&

***சுனாமியால் உயிழிந்தவர்களுக்கு மாபெரும் இரங்கல் கூட்டம்***

மெழுவத்தி ஏந்தியும், அமைதி ஊர்வலம் மற்றும் மத வழிபாடுகளை நடத்தியும் தங்கள் இரங்கலை தெரிவித்தனர். வரிசையாக நிறுத்தப்பட்டிருந்த படகுகளின் கருப்புக் கொடி ஏற்றி உயிரிழந்தவர்களுக்கு தங்கள் ஆறுதல்களை தெரிவித்தனர்.

தற்போது அன்னை சத்திய அரசு அனாதை விடுதியில் வசிக்கும், சுனாமியால் பெற்றோரை இழந்து குழந்தைகள் தங்களின் பெற்றோர்களின் நினைவாக மரக்கன்றை பூங்ககாவில் நட்டனர். மீனவ சமூதாய பிரதிநிதி, தன்னார்வலர் அமைப்புகள் மற்றும் மாவட்ட அதிகாரிகள் ஒன்று கூடி நினைவு பூங்காவை திறந்து வைத்தனர் அப்பூங்கவில் 6,065 மரக்கன்றுகள் உயிரிழந்தவர்களின் நினைவாக நடப்பட்டிருந்தது.

சுனாமி தாக்கி 9.17 மணி துளியைக்காட்டிக் கொண்டிருக்கும் கடிகாரத்தை நாகை கலெக்டர் அலுவலக வளாகத்தில் நிறுவியுள்ளார் அங்கு அனைவரும் உள்ள மீனவ சமூதாயத்தினர் கடந்த திங்கள் காலை 4 மணிக்கு தங்கள் இதய அஞ்சலியை மெழுகுவத்தி ஏற்றி வெளிப்படுத்தினர் இது அன்று மதியம் 12 மணி வரை நீடித்தது. பானையில் உள்ள பாலை தண்ணிரில் உற்றுவது மற்றும் புதைக்கப்பட்ட இடத்தில் மலரைதூவுவது போன்ற சிறு சம்பர்தாயங்களையும் செய்து தங்கள் துக்கத்தை வெளிப்படுத்தினர்.
ஆதாரம் : http://www.hindu.com/2005/12/27/stories/2005122709820100.htm



Ader

FONDATION DE FRANCE

***சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கும் நிவாரணத்தில் எந்த வித்தியாசமும் இல்லை.***

புதுவை மாநில துணை நிலை ஆளுநர் எம். எம். லகோரா கூறுகையில் சுனாமியால் பாதிக்கப்பட்டு நிவாரணம், புனரமைப்பு மற்றும் மறுகட்டுமானம் நடவடிக்கையில் புதுவை நிர்வாகம் எந்த ஒரு வேறுபாட்டையும் யாரிடமும் காட்டவில்லை என்றார்.

“சுனாமிக்கு பிந்தைய புது வாழ்வு” என்ற முதல் மாத செய்திமடலை திட்ட அமலாக்க முகமை பரிசளித்துள்ளது.
அதாரம்: http://www.hindu.com/2005/12/27/stories/2005122704030300.htm

***ஒரு நாள் பிறகு, கேரளா மற்றும் தமிழ்நாட்டில் பெறும் அச்சம் நிலவியது.***

முதலாம் ஆண்டு சுனாமிக்கு மறுநாள் நாகர்கோவில் கடலோரப் பகுதியில் மீன் பிடிக்க செல்லவில்லை. டேனியல் மற்றும் அவர் நண்பர்கள் 50 பேர் சிறிய, மரத்தாலான இரண்டு பேர் கட்டுமரத்தில் சங்கு தேடும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.
கடந்த திங்கள் அன்று, அமைதி ஊர்வலத்திற்கு பிறகு பெறும் அச்சம் நிலவியது. இச்சம்பவத்தால் நிகழ்ச்சியில் கலந்துக் கொண்ட ஆயிரக்கணக்கானோர் இரவு விடுதிரும்பவில்லை கன்னியாக்குமரி மாவட்டத்தில் 4 கிரமத்திலும் கேரளவிலும் சுனாமி பாதித்த இடங்களின் புரளி காரணமாக மக்கள் பள்ளிகள் மற்றும் தென்னன்தோப்புகளில் தங்கி தங்கள் பொழுதை கழித்தனர்.
40க்கும் மேற்பட்ட மறு வீடுகட்டும் பணி தடைப்பட்டது, புரளி காரணமாக தொழிலாளர்கள் மேடான பகுதிக்கு சென்று விட்டனர்.
அதாரம் : http://www.newindpress.com/NewsItems.asp?ID=IET20051227220348&Page=T&Title=Southern+News+%2D+Tamil+Nadu&Topic=0&

## மறுகட்டுமானம்

### அந்தமான் மற்றும் நிக்கோபார்

***அந்தமானில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்கள் வீடின்றி தவிப்பு***

சுனாமி ஏற்பட்டு ஓர் ஆண்டுகாலம் ஆகியும் அந்தமான் மற்றும் நிக்கோபார் பகுதியில் வாழ்பவர்கள் நிரந்தர வீடின்றி தற்காலிக குடியிருப்பிலேயே வாழ்கின்றனர். “நாங்கள் எங்கள் சொந்த வீட்டை கட்ட விரும்புகிறோம்” என்று அந்தமான் நிக்கோபார் பழங்குடியினர் அமைப்பின் ர த்யூசம் தெரிவித்தார். நாங்கள் அரசிடம் கருவி உபகரணங்கள் மற்றும் விழுந்த மரத்தில் இருந்து மரப்பலகை வெட்டித்தர கேட்டிக்ருகிறோம் ஆனால் அரசு அதையும் எங்கள் மேலேயே திணிக்கிறது.

அந்தமானில் சுனாமியால் வீடு இழந்தவர்களுக்கு அரசு பிரத்தியேக புனரமைப்பை இரண்டு கட்டங்களாக செய்ய திட்டமிட்டிருக்கிறது. முதலில் உலோகங்களான 10,000 பகுதி தற்காலிக குடியிருப்பு தீவின் அனைத்து பகுதியிலும் பருவமழைக்கு முன் கட்டுவது தற்பொழுது வீடுகட்டும் யுக்தியை இறுதி செய்ய திட்டமிட்டிருக்கிறது.
பல வடிவங்கள் மற்றும் மாதிரிகளை உள்ளூர் பழங்குடியினர் மற்றும் பழங்குடியினர் அல்லாதவர்களிடம் கொடுக்கப்பட்டுள்ளது ஆனால் இது வரை உடன்பாடு ஏற்பட வில்லை.
ஆதாரம் : http://news.bbc.co.uk/2/hi/south_asia/4527640.stm

## புதுவை

***காரைக்காலில் மறுகட்டுமானம் மெதுவாக நடக்கிறது.***

காரைக்காலில் சுனாமியால் வசிப்பவர்களின் முதன்மையான கேள்வி எப்பொழுது தாங்கள், தங்கள் நிரந்தர வீட்டிற்கு திரும்புவது? என்பதான்.

அடுத்துள்ள நாகை மாவட்டத்தைக் காட்டிலும் மிகவும் மெதுவாக புனரமைப்பு வேலை நடக்கிறது. காரைக்கால் கடலோர கிராமங்களை கிலிச்சல்மேடு மற்றும் காரைக்கால்மேடு ஆகிய இடத்தில் தற்போழுது வேலை நடப்பதை காணமுடியவில்லை.

பாதிக்கப்பட்ட சில அதிகாரிகளின் அலட்சியம் மற்றும் உழலே காரணம் என்று அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர். இது அனைவரும் எதிர்பாராத ஒன்று எனேனில் புதுவை அரசு எப்பொழுதுமே வளர்ச்சி மற்றும் பொறுப்பில் அண்டை மாநிலமான தமிழ்நாட்டை காட்டிலும் மேலோங்கியே இருக்கும் என்பதாக இதுவரை நம்பப்பட்டது.

ஆதாரம் : http://www.newindpress.com/NewsItems.asp?ID=IET20051228013352&Page=T&Title=Southern+News+%2D+Tamil+Nadu&Topic=0&

***சுனாமியால் பாதித்தவர்கள் வீடு கோரி சாலை மறியல்***

சுனாமியால் கடுமையாக பாதிக்கப்பட்டு உயிர்களையும், உடமைகளையும் இழந்த பட்டினச்சேரி மீனவ சமுதாயத்தினர் சாலை மறியலில் ஈடுபட்டனர். சுனாமி கட்டுமானத்தில் மீனவர்களுக்கும் வெளிநாட்டை சோந்த இந்திய கம்பேனிக்கும் இடையில் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் வீடுகட்டும் பணி பாதித்துள்ளது.

திரு. லட்சுமி மிட்டல், புதுவை அரசுடன் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தந்தின் அடிப்படையில் 450 வீடுகள் கட்டும் பணி புதுவை அரசு 23 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்தி மூன்று மாதத்திற்கு முன் கொடுத்தது.

நிலத்தை சம்ன்படுத்தும் வேலை நடந்து கொண்டிருக்கும் பொழுது கிராமமக்கள் கட்டிடத்தின் அமைப்பை மாற்ற கோரி எதிர்ப்பு தெரிவித்தனர். அதையடுத்து ஒப்பந்தகாரர் மற்றும் ஹைதராபாத்தில் இருந்து வந்திருந்த குழுவினர் இரண்டு மாதத்திற்கு முன்னர் அத்திட்டத்தை கைவிட்டனர். அதில் இருந்து இன்று வரை அப்பிரச்சனைக்கு தீர்வு காணப்பட வில்லை

ஆதாரம் : http://www.hindu.com/2005/12/16/stories/2005121611320300.htm

## தமிழ்நாடு

***இருளர் மற்றும் தலித்துக்களும் நிரந்தர வீடு பெறுபவர்.***

கடலூர் மாவட்டத்தில் பெரும்துயரம் நேர்ந்தப்பின்னர் மீனவ சமுதாயத்தினர் மற்ற சமுதாயத்தினர் உடனான உறவு வலுப்பெற்றது. சுனாமியின் மற்றொரு விளைவாக அரசுக்கும், அரசுசாரா நிறுவவனத்திற்கும் இடையிலான உறவும் வலுத்துள்ளது. மேலும் இருளர், தலித் மற்றும் மீனவர்களுக்கு இடையிலான உறவு மென்பட்டு அனைவரும் பயனடைகின்றனர்.

உண்மையான மதிப்பீட்டின்படி 2,322 வீடுகள் 31 கிராமங்களில் பாதிக்கப்ட்டுள்ளது. ஆனால் பழைய மதிப்பீட்டின்படி நூற்றுக்கணக்கான இருளர் மற்றும் தலித்துக்கள் பாதிக்கப்பட்டு வீடுகளையும் வேலையும் இழந்தனர் ஆனால் அவை கணக்கெடுப்பில் சேர்க்கவில்லை. இருளர் துண்டியில் மூலம் மீன்கள் மற்றும் நண்டுகளை பிடித்தனர். ஏனெனில் அவர்களால் படகு மற்றும் வலை வாங்கும் அளவிற்கு வசதிகள் இல்லை தலித்துக்கள் படகு வைத்திருக்கும் மீனவர்களுடன் மீன்படி வேலைக்கு செல்வார்கள்.

இருளர் மற்றும் தலித்துக்கள் வாழ்கைத் தரத்தை முன்னேற்றுவதற்காக கலெக்டர் திரு. பேடி, நிரந்தர வீடு இவர்களுக்கும் கட்ட வேண்டும் என்று பறிந்துரை செய்தார் 1,679 நிரந்த வீடுகள் மேலும் கட்ட திர்மானித்துள்ளார். அவற்றில் 600 வீடுக்ள தலித் மற்றும் இருளர் குடும்பத்தினர்க்கு வழங்கப்படும் மற்றவை வருமைக்கோட்டிற்கு கீழ் உள்வர்களுக்கு வழங்கப்படும் சுனாமியால் பாதித்தவர்களுக்கு கட்டப்படும் குடியிருப்பு 2,322லிருந்து 4,001 ஆக உயர்ந்தது.
ஆதாரம் : http://www.hindu.com/2005/12/21/stories/2005122106950300.htm

***கட்டுமானப்பணி ஏப்ரல் மாதத்தில் முடிவடையும் மாவட்ட ஆட்சியர்***

சுனாமியால் பாதிக்கப்பட்ட கடலோர மாவட்டங்களான நாகையில் வீடுகட்டும் பணி முழுவீச்சில் நடைபெறுகிறது. மற்றும் 17461 வீடுகள் 79 இடங்களில் ஏப்ரல் மாதத்தில் முடிவடைந்து பாதிக்கப்பட்ட வர்களிடம் ஒப்படைக்கப்படும் என்று மாவட்ட ஆட்சியர் திரு. ஜெ. இராதாகிரு ணன் கூறினார்.
ஆதாரம் : http://www.hindu.com/2005/12/27/stories/2005122704370500.htm

***இப்பற்றாக்குறை புனரமைப்பு பணிக்கு இடையூராக உள்ளது.***

சரியாக ஒரு வருடத்திற்கு முன் ஆயிரக்கணக்கான சுனாமியில் பாதித்த குடும்பத்தினர் இடம் பெயர்ந்தனர், பகுதி தற்காலிக குடியிருப்பில் அவர்கள் தற்பொழுது போராடி வருகின்றன.

வீடின்றி வாழ்வதைக்காட்டிலும் ஆயிரக்கணக்கானோர் சென்னை கடலோரப் பகுதியில் தங்கள் உயிர் மற்றும் உடைமைகளை பலர் இழந்துள்ளனர். நிர்வாகம் அவர்களுக்குத் தேவையான இடத்தை தேர்வு செய்வதற்கே ஓர் ஆண்டு காலம் ஆனது. அவற்றில் பெரும்பாலானோர் இன்னும் தற்காலிக குடியிருப்பிலேயே வாழ்கின்றனர். சென்னையில், இடம் பெயர்ந்தவர்களுக்கு வீடு கிடைப்பது கடினம்.

இயல்பாக, சுனாமி குடியிருப்புகள் தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ இருக்கும். ஆனால் சென்னையில் பகுதி–தற்காலிக குடியிருப்புகள் கட்டப்பட்டிருக்கிறது.
ஆதாரம் : http://www.hindu.com/2005/12/26/stories/2005122615150300.htm

## சமூகம்

***சுனாமியால் தப்பி பிழைத்தவர்க்கு புது வாழ்க்கைத் துணை***

சுனாமி பாதித உடன் திருமணம் அவசியமாக இருந்தது என்று நாகை மற்றும் காரைக்கால் கடலோர கிரமங்களில் உள்ள மீனவர்கள் கூறினர். மனைவியை இழந்தவர்கள் தங்கள் மனைவியின் தங்கை அல்லது உறவினர்களை மனந்தனர். இளைஞ்ர்கள் மற்றும் பல ஆண்கள் விதவைகளை மணக்க முன்வந்தனர். இந்தத் திருமணங்கள் உள்ளுர் பஞ்சாயத்தினர்களின் முன்னிலையில் நடைபெற்றது.

பெரும்பாலானோர் இத்தகைய திருமணத்திற்கு முன் வந்தது நிவாரண பணத்தை மனதில் கொண்டுதான் என்று சுனாமியால் பாதிக்கப்பட்டவரும் தற்பொழுது தற்காலிக குடியிருப்பில் வசிப்பவருமான வீரம்மாள் கேள்வி ஒன்றிற்கு பதிலளிக்கும் பொழுது கூறினார் மேலும், அனாதை குழந்தைகளை வைத்திருந்தவர்களுக்கு வேறு வழி இல்லை என்றும் கூறினார்.
ஆதாரம் : http://www.newindpress.com/NewsItems.asp?ID=IET20051223102918&Page=T&Title=Southern+News+%2D+Tamil+Nadu&Topic=0&

***சுனாமியால் அனாதை ஆனவர்களுக்கு சட்டரிதிகான நிலவரம்***

கடந்த ஆண்டு ஏற்பட்ட சுனாமியால் தனது பெற்றோரை இழந்த பி. பாட்பினோ, கன்னியாக்குமரியை சோந்தவர். அப்பெண் குழந்தையின் தாய்மாமன் அவளைத் தத்தெடுக்க விரும்புகிறார் அவர் தனது குழுந்தைகளை சுனாமியில் இழந்தார். ஆனால், அச்சிறுமியின் தாத்தா, பாட்டி அரசு நட்ட ஈடாக 5 லட்சம் கொடுப்பதாக உறுதியளித்ததை மனதில் கொண்டு தாங்களே அக்குழந்தையை தத்தெடுக்கப் போவதாக கூறுகின்றனர். இக்குழந்தைக்காக இவர்கள் சண்டை போடுவது அசாதாரணமானது இல்லை. மேலும் அவர்களுக்கு துனைநிற்க்கூடாது.
ஆதாரம் : http://www.newindpress.com/NewsItems.asp?ID=IE920051228002619&Page=9&Title=Chennai&Topic=0&

## மற்ற பயனுள்ள செய்திகள்:

சுனாமியால் கடல்வாழ் உயிருக்கு ஏற்பட்ட பாதிப்பபை ஆய்வு செய்ய வேண்டும்
ஆதாரம் :
http://www.newindpress.com/NewsItems.asp?ID=IE920051228014817&Page=9&Title=Chennai&Topic=0&

இரமநாதபுரம் கடலோரப் பகுதியில் மரக்கன்றுகள் நட அழைப்பு
ஆதாரம் : http://www.hindu.com/2005/12/28/stories/2005122808170300.htm

சுனாமிக்குப் பிறகு சுற்றுப்புறச் சூழலின் சமநிலை மாறியிருக்கிறது. எனவே இதைப்பற்றிய ஆழ்ந்த ஆராய்ச்சி தேவை: எல். ஏ.நா நிபுணர்கள்.
ஆதாரம் : http://www.hindu.com/2005/12/28/stories/2005122821670300.htm

மனிதனைத் தொடும் பேரழிவு மேலாண்மை
ஆதாரம் : http://www.hindu.com/2005/12/18/stories/2005121816410300.htm

இந்தியப் பெருங்கடலில் சுனாமி முன்னெச்சரிக்கை சாதனம்
ஆதாரம் : http://news.bbc.co.uk/1/hi/sci/tech/4524642.stm

முன்னெச்சரிக்கை சாதனம் நிறுவுவது தற்போதைய உடனடி தேவை
ஆதாரம் : http://www.hindu.com/2005/12/26/stories/2005122606340200.htm

மீனவர்கள் இங்கு அனைத்தையும் மீண்டும் துவக்க இருக்கின்றனர்.
ஆதாரம் : http://www.hindu.com/2005/12/21/stories/2005122110770500.htm

சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்கள் மாற்று வாழ்வாதாரத்தை விரும்புகின்றனர்.
ஆதாரம் : http://www.hindu.com/2005/12/26/stories/2005122607450400.htm

சுனாமியால் பாதித்த மீனவர்களுக்கு மனநலப் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும்
ஆதாரம் : http://www.hindu.com/2005/12/26/stories/2005122604530300.htm

மீனவர்கள் கடலுக்கு சென்று உடனடியாக கரைக்கு திரும்பிது அடுத்த அச்சத்தை ஏற்படுத்தியது.
ஆதாரம் :
http://www.newindpress.com/NewsItems.asp?ID=IET20051221021326&Page=T&Title=Southern+News+%2D+Tamil+Nadu&Topic=0&

சுனாமி நினைவிற்காக பாட்டுக்கச்சேரி டிசம்பர் 26ஆம் தேதி நடத்தப்பட்டது.
ஆதாரம் : http://www.hindu.com/2005/12/18/stories/2005121816120700.htm

சுனாமி சோகத்தில் இருந்து ஒவ்வொருவம் பாடம் கற்க வேண்டும்
ஆதாரம் :
http://www.newindpress.com/NewsItems.asp?ID=IE920051221101343&Page=9&Title=Chennai&Topic=0

சுனாமி பாதித்த மாவட்டங்கள் அதிக பள்ளிகளை பெற உள்ளன.
ஆதாரம் :
http://www.newindpress.com/NewsItems.asp?ID=IET20051223013014&Page=T&Title=Southern+News+%2D+Tamil+Nadu&Topic=0&

இயற்கை பேரழிவுகளை ஜப்பானியர்கள் சமாளிக்கும் முறை
ஆதாரம் : http://www.hindu.com/2005/12/25/stories/2005122515420700.htm

சுனாமியால் “உயிரிழந்தவர்கள்” உயிர் பிழைத்தனர்.
ஆதாரம் : http://www.newindpress.com/NewsItems.asp?ID=IET20051228012606&Page=T&Title=Southern+News+%2D+Tamil+Nadu&Topic=0&

சுனாமியால் பாதித்த 2,000 குடும்பங்கள் வீடு பெற்றனர்
ஆதாரம் : http://www.hindu.com/2005/12/17/stories/2005121707690500.htm

கரிதாஸ் இந்திய சுனாமியால் பாதித்தவர்களுக்கு வீடு வழங்கியது.
ஆதாரம் : http://www.hindu.com/2005/12/24/stories/2005122400481400.htm

பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு புனரமைப்பு மிகவும் விரைவாக நடைபெறுகிறது : தமிழக முதல்வர் மாண்புமிகு ஜெ. ஜெயலலிதா
ஆதாரம் : http://www.hindu.com/2005/12/27/stories/2005122706310600.htm

பேரழிவு நிவாரணத்திற்காக விரைவு நிதியம் ஒன்று உறுவாக்கப்பட்டுள்ளது.
ஆதாரம் : http://www.hindu.com/2005/12/16/stories/2005121619430600.htm

ஆசிய வளர்ச்சி வங்கி மூலம் ரூபாய் 190 கோடி சுனாமியால் பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கு வழக்கப்பட்டது.
ஆதாரம் : http://www.newindpress.com/NewsItems.asp?ID=IET20051221023020&Page=T&Title=Southern+News+%2D+Tamil+Nadu&Topic=0&

சுனாமி புனரமைப்பில் தொண்டு நிறுவனங்கள் முக்கிய பணியாற்றுகின்றன.
ஆதாரம் : http://www.hindu.com/2005/12/26/stories/2005122600260900.htm

சுனாமி நிவாரணத்தை தவறாக கையாண்டதாக குற்றச்சாட்டு
ஆதாரம் :
http://www.hindu.com/2005/12/25/stories/2005122505770400.htm

நிவாரணப்பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. புதுவை ஆளுநர் திரு. எம்.எம். லகேரா.
ஆதாரம் :
http://www.hindu.com/2005/12/26/stories/2005122608470300.htm

சுனாமி நிவாரணம் வழங்குவதில் பற்றாக்குறை
ஆதாரம் : http://www.newindpress.com/NewsItems.asp?ID=IET20051225101934&Page=T&Title=Southern+News+%2D+Tamil+Nadu&Topic=392&

சுனாமி நிவாரனத்திற்கு 18 மில்லியன் அமெரிக்கன் டாலர் செலவு
ஆதாரம் : http://www.newindpress.com/NewsItems.asp?ID=IET20051226104619&Page=T&Title=Southern+News+%2D+Tamil+Nadu&Topic=392&

மீனவர்கள் இன்னும் சுனாமி அச்சத்தில் உள்ளனர்
ஆதாரம் : http://www.newindpress.com/NewsItems.asp?ID=IE920051223103018&Page=9&Title=Chennai&Topic=0&

மீனவர்கள் மற்றும் மாற்று வாழ்வாதாரம்
ஆதாரம் : http://www.hindu.com/2005/12/26/stories/2005122606310500.htm

---


**<u>மொழி பெயர்ப்பு</u>**
திரு. ம. முருகானந்தம்
மின் அஞ்சல் : infoinde@ader-france.org

<u>இலக்கணம் மற்றும் பிழைதிருத்தம்</u>
திரு. மு. கணே

<u>ஆக்கம்:</u>
திரு. ச. சோழன்
தொலைபேசி : **+91–(0) 99942 08811**
மின்அஞ்சல் : sozhan6@sify.com

## புதிய ஆன் லைன் வளங்கள்

- “இந்திய சுனாமியில் முதியவர்கள் வாழ்வதற்கு போராட்டம்” என்ற தலைப்பில் பின்வரும் இணையதளத்தில் காணலாம்.
  http://www.reliefweb.int/rw/RWB.NSF/db900SID/EVOD-6KBK4U?OpenDocument

- தமிழ்நாடு முதல்வர் “ சுனாமியைப் பற்றி தகவல்கள்” என்ற புத்தகத்தை தலைமைச் செயலகத்தில் வெளியிட்டார் அதன் விவரம்
  http://www.tn.gov.in/pressrelease/pr261205/pr261205_3.htm

- “காலம் கடந்த அக்கரை” சுனாமியில் இருந்து கற்றுக்கொண்ட பாடம் புகைப்பட வடிவில் காணலாம்.
  http://www.praxisindia.org/SynthesisReport.pdf

- சுனாமி மற்றும் குழுந்தைகள் சுனாமியால் குழந்தைகளின் பங்களிப்பில் இருந்த பெற்ற பாடம்.
  http://www.plan-uk.org/pdfs/childrenandthetsunami.pdf

- இந்திய பெருங்கடலில் ஏற்பட்டு ஒரு வருடம் ஆன பிறகு மறுகட்டுமானத்தில் ஏற்படும் சவால்கள் மற்றும் முன்னேற்றங்களில் எதிரொளி என்ற ஆவணத்தை காணலாம்.
  http://www.hfhap.org/news/news_detail.asp

- வேலைக்கு திரும்பினர் சுனாமி ஏற்பட்டு 12 மாதங்கள் ஆன பிறகு எவ்வாறு மக்கள் தங்கள் வாழ்வாதரத்தை பெற்றுள்ளனர் என்பதை காணலாம்.
  http://www.oxfam.org.uk/what_we_do/issues/conflict_disasters/downloads/bp84_tsunami_livelihoods.pdf

- சுனாமியால் பாதிக்கப்பட்ட நாடுகளின் வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதாரம் அதிகரித்துள்ளது. இதன் முழு விவரம்.
  http://www.ilo.org/public/english/bureau/inf/download/tsunami_ebook.pdf

- “ஒரு வருடத்திற்கு பிறகு நிவாரணம் மற்றும் புனரமைப்பு முயற்சிகள் இன்றும் பிரச்சனையாகவே உள்ளது” என்று ஐக்கிய நாட்டு நிபுணர்கள் கருத்து.
  http://www.reliefweb.int/rw/rwb.nsf/db900SID/KHII-6KA3JR?OpenDocument&rc=3&cc=ind

  தெற்காசிய சுனாமி விதவைகள் தங்கள் பங்கை பெறுவதற்கு போராடுகின்றனர்
  .http://www.reliefweb.int/rw/RWB.NSF/db900SID/DPAS-6K9CHU?OpenDocument&rc=3&cc=ind

- தெற்காசிய சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நன்கொடையாலர்கள் கண்டிப்பாக பொறுப்பேற்க வேண்டும் என்று ஐக்கிய நாட்டு நிபுணர்கள் எச்சரிக்கை.
  http://www.reliefweb.int/rw/RWB.NSF/db900SID/KHII-6K92VW?OpenDocument

- தமிழ்நாடு அரசு சுனாமி சம்மந்தமான நடவடிக்கையை டிசம்பர் மாதம் 15ஆம் தேதி வரையிலான விவரங்களை வெளியிட்டுள்ளது.
  http://www.tn.gov.in/tsunami/tsunami-relief.htm

## நிகழ்வுகளின் பட்டியல்

| நிகழ்வுகள் | அமைப்பாளர் | தேதி/ காலம் | இடம் |
|---|---|---|---|
| **Training:** On Psychosocial Care. | Training Programme on psychosocial care<br>**Contact:** heloise@basicneeds-srilanka.org<br>Ph: 94112 87801,2871418 | 02-02-06 to 12-02-06 | Sri Lanka. |

## தொடர்பு கொள்ளவேண்டிய முகவரிகள் :

### புதுவை

| | |
|---|---|
| Laurent Tyers<br>Information Officer<br>Tel. +91 413 520 0606<br>Mobile : +91 98946 80458<br>Email : infoinde@ader-france.org | M. Muruganadam<br>Assistant Information Officer<br>Tel. +91 413 520 0606<br>Mobile : +91 98946 22240<br>Email : infoinde@ader-france.org |

### பிரான்சு

| | |
|---|---|
| **ADER** : Association pour le Développement Economique Régional<br>Gionata Simioni,<br>Programme Manager<br>31 Rue de Reuilly, 75012 Paris - France<br>Tel. +33 1 40 24 03 03<br>Fax: +33 1 40 24 09 77<br>Email: contact@ader-france.org | **Fondation de France**<br>Martin Spitz,<br>Programme Manager :<br>Email: martin.spitz@fdf.org<br>Estelle Hédouin,<br>Programme Information Manager:<br>Email: estelle.hedouin@fdf.org |